**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.79/2020**

2024ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 07 -ம் நாள்வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 07.08.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ரமேஷ் | ஜாதி | : |
| த /பெயர் : | வடிவேல் | மதம் | : |
| கிராமம் : | | தொழில் | : |
| வட்டம் : | | வயது | : |

வா.சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நிரூபண வாக்குமூலத்தில் என் அப்பா எந்த காலத்திலிருந்து சீத்தாராம அய்யரிடம் வேலை பார்த்து வந்தார் என்பது குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சீத்தாராம அய்யர் எந்த வருடம் இறந்தார் என்பது குறித்து எனக்கு தெரியாது. சீத்தாராம அய்யரின் வாரிசுகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. தாவா சொத்து என் அப்பா காலத்திலிருந்து அனுபவம் செய்யப்பட்டு வருகிறது, என்பதற்குண்டான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று கடந்த 2021 ஆம் ஆண்டிற்குரியது என்றாலும், என் காலத்தில் அனுபவம் செய்யப்பட்டு வந்தற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. கிராம நிர்வாக அலுவலர் என் அப்பா காலத்திலுள்ள அனுபவ ஆவணங்களை வழங்க மறுத்து விட்டார். சீத்தாராம அய்யரின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் 25 வருடத்திற்கு முன்பிபிலிருந்து தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் அவற்றை நிரூபணம் செய்யும் விதமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2015-2016-2017 ஆம்

ஆண்டிற்குரிய வீட்டு வரி ரசீதில் தோப்பு தெரு என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2015-2016-2017 ஆம் ஆண்டிற்கு முன்பு உள்ள ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.